மாநாட்டை உலகத் தலைவர்கள் புறக்கணிக்க வேண்டும் என வெளிப்படையாகத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசியவர். மனித உரிமைச் செயல்பாடுகளுக்காக அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 10–10

3. அறிவிப்புகள்

(அ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு, முதற்கட்டமாக இன்று (6–1–2022) வினாக்கள்–விடைகள் நேரம், நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மக்களாட்சியின் மாண்பினை நிறைவேற்றவும், பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கவும் உறுதிபூண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், நூறாண்டு கடந்த சிறப்புமிக்க தமிழக சட்டமன்றப் பேரவையில், தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்வண்ணம், சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளை (மேசையைத் தட்டும் ஒலி) நேரடி ஒளிபரப்பு செய்ய ஆலோசனைகளை வழங்கியதன்பேரில், இன்று, முதற்கட்டமாக, வினாக்கள்–விடைகள் நேரம் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது என்கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இதனை ஒருமனதாக வரவேற்று, மகிழ்வீர்கள் என நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களாட்சி தத்துவத்தின் மாண்பினைக் காத்திட அடித்தளமிட்ட பல்வேறு தலைவர்களின் வரிசையில் நின்று,

இன்றைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டத்திற்குக் கால்கோளிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் அளித்த, இன்றைக்கு எடுக்கப்படவுள்ள வினா எண் ஒன்றிற்குப் பதிலளிக்க மகிழ்வோடு அழைக்கிறேன்.

4. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

1—

மெட்ரோ இரயில் சேவை

***10861—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெட்ரோ இரயில் சேவையை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து பல்லாவரம் மற்றும் குரோம்பேட்டை வழியாக வண்டலூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கான பதில்.*

(அ) மற்றும் (ஆ) வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் சென்னை மாநகருக்கான புதிய பேருந்து முனையம் அமைக்கப்பட்டு வருவதன் காரணமாக, மெட்ரோ இரயில் இணைப்பை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் வரை நீட்டிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதனைக் கருதி, இந்தத் தடத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் பன்னாட்டு நிறுவனத்தின் மூலமாக முடிக்கப்பட்டுள்ளன. இந்த விரிவான இறுதித் திட்ட அறிக்கை தற்போது அரசின்